5 ஆகஸ்ட்டு 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 18ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்



மாதாந்திர கருப்பொருள்:

**அஞ்சாதீர், நாம் மரியாளோடு கிறிஸ்துவிற்குச் சொந்தமானவர்கள்.**

# கொடுப்பவரை நாடுங்கள்

முதல் வாசகத்தில் மோசே எதிராக இஸ்ராயேல் மக்கள் முணுமுணுப்பதைக் கேட்கிறோம். தொடக்கத்தில் எகிப்துக்கு வெளியேறுகிறோம் என்பதை அங்கு மகிழ்ச்சியும் பரவசமும் நிலவியது. பாலைநிலத்தின் மத்தியில் உணவு மற்றும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு துன்புறும் போது, எகிப்தை விட்டு வெளியேறியது குறித்து வருத்தம் கொள்கின்றனர். "இறைச்சிப் பாத்திரத்தின் அருகில் அமர்ந்து, அப்பம் உண்டு நிறைவடைந்து" இருப்போமே என அவர்கள் முணுமுணுத்தனர். சில வேளையில், இவ்வாறுதானே நமது வாழ்க்கையும் அமைந்து விடுகிறது? எல்லாம் இனிமையாக இருப்பதாக இருக்கும் சமயத்தில், பெரும் சிக்கல்கள் நமது பாதையில் ஏற்படும், அப்போது போகிறப் பாதை அறியாது பாலைநிலத்தில் பயணிப்பது போல இருக்கும். நம்முள் எழும் கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் விடை காண தடுமாறுவோம். பிறரையும் ஏன் நம்மை நாமே குறைக் கூறிக்கொள்வோம். கடவுளையும் விட்டு வைக்க மாட்டோம். ஆயினும், நம்மையும் நமது அன்புக்குரியவர்களையும் பாதுகாப்பேன் என கடவுள் வாக்குறுதி அளித்திருக்கிறார் அல்லவா?

> **போகும் பாதை சரியான பாதை என ஒருவர் உறுதிப்படுத்த விரும்பினால், கண்ணை மூடிக் கொண்டு இருட்டில் நடக்க வேண்டும்.**
>
> - புனித சிலுவை யோவான்

நற்செய்தியில், இயேசுவைக் காண மக்கள் ஆர்வமாக தேடுகின்றனர். அப்பத்தையும் மீன்களை பெருகச் செய்த போது கண்ட அறிகுறியை அவர்கள் பார்த்ததால், அவர்கள் தேடி வருகின்றனர் என்பதை இயேசு அறிவார். ஒன்றைத் தேடி அவர்கள் வருகின்றனர். 'வாழ்வளிக்கும் அப்பமான' அவரைத் தேடியல்ல. நீங்கள் எப்படி? கடவுள் உடனான உங்கள் உறவு எப்படி? அனைத்தும் வழங்குபவரை முதலில் நாடுவீர்களா அல்லது நீங்கள் விரும்பும் அனைத்தையும் பெறும் ஆசையில் அவரை நாடுவீர்களா?

**கடவுள் எப்போதும் தமது வாக்குறுதியை நிறைவேற்றுவார்.** ஆயினும் இதனை அவர் தமக்குரிய பாணியிலும் காலத்திலும் நிறைவேற்றுவார். எகிப்திலிருந்து மக்களை அழைத்து வந்த போது, அவர்களது பயணம் சுகமான பயணமாக இருக்கும் என கடவுள் வாக்களிக்கவில்லை. ஆனால் அவர்களோடு இருப்பேன் என அவர் வாக்குறுதி அளித்தார். மக்களின் அழுக்குரல் கேட்கும் போது, அவர்களுக்குத் தேவைப்படும் உணவையும் தண்ணீரையும் கடவுள் வழங்கினார். இறைச்சியையும் ரொட்டியையும் மக்கள் விரும்பினர், ஆனால் கடவுள் அவர்களுக்கு மன்னாவை வழங்கினார். மன்னா, மரப்பிசின் வகை, இஸ்ராயேல் மக்கள் உயிர் வாழ்வதற்குப் போதுமானது. கடவுள் நம்மை பாதுகாப்பார். நாம் விரும்புவதை அல்ல நமக்குத் தேவையானதை கடவுள் வழங்குவார். தேவதாய் மரியாளைப் போல் கடவுளை நம்ப கற்றுக்கொள்ளுங்கள். ✝

## வாரம் ஒரு வசனம்

**கடவுள் எப்போதும் தமது வாக்குறுதியை நிறைவேற்றுவார்.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 31/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 ஆகஸ்ட்டு (ஆவணி) மாதத்தின் கருப்பொருள்:*
***மரியாவுடன் நாம் கிறிஸ்துவுக்கு உரியவராவோம், அஞ்சாதீர்***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** பொதுக்காலம் 18ஆம் ஞயிறு **சனி 04-08-2018 - ஞாயிறு 12-08-2018**

" ஆண்டவர் அவர்களுக்கு வானத்து உணவை வழங்கினார் திபா 77
வி.ப: 16:2-4, 12-15 ; தி.பா: 78:3-4: 23-24, 25:54; எபே:4:17:20-24; யோவான்: 6: 24-35

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 04 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித புனித அலோசியஸ்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி<br>ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 05 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (இளைஞர்கள்)<br>திருப்பலி (ஆ) (புனித பெனடிக்ட்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பல (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |
| திங்கள் | 06 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 07 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 08 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 09 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 10 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) புனித லூர்து அன்னை சிற்றாலயம் - சாகா*** |

**பொதுக்காலம் 19ஆம் ஞயிறு**
1அரசர்: 19: 4-8 தி.பா: 33: 2-3, 4-5-1, 6-7, 8-9 எபே: 4: 30 - 5:2 யோவான்: 6: 41 - 51
**"ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்" - திபா 33**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 11 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித லியோ) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி<br>ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 12 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (மீடியா குழு)<br>திருப்பலி (ஆ) (திருவழிபாட்டுக் குழு)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பல (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2018 ஆகஸ்ட் (ஆவணி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

i) பங்கு ஆலய காணிக்கை
28/29 ஜூலை ரிம:8,144.70
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**ii) இன்று சமூக அக்கறைப் பணிக்குழுவினரின் திட்டங்களுக்காக இரண்டாவது காணிக்கை எடுக்கப்படும்.**
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**iii) மினவுதல் தேவாலய குடியேற்ற வாசிகளின் காலை உணவு விற்பனை:** நாள்: 12 ஆகஸ்ட் 2018 நேரம்: காலை 7.30 -12.00 பகல்அனைத்து உணவு மையங்களையும் சென்று பார்த்து வாங்கி ஆதரவு தாருங்கள்

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்**
அந்தோணி கோ இறப்பு 26-07-2018
**முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!**

**மரித்தோர் மற்றும் அடக்கம் - சிகாமட் கல்லறை**

- **மினவுதல் தேவாலய** பங்கின் கீழ் இருக்கும் கத்தோலிக்க குடும்பத்தில் இறப்பு ஏற்பட்டால், அதற்கான இறப்பு திருப்பலி இறந்தோரின் குடும்பத்தினரால் மட்டுமே வந்து பதிவு செய்ய முடியும். இறப்பு ஏற்பாட்டு குழுவினர் இதை செய்ய அனுமதியில்லை.
- **சிக்காமட் கல்லறையில்** இடம் பதிவு செய்ய குடும்பத்தினர் சிரம்பான் நகராண்மைக் கழகத்தில் பதிவு செய்ய வேண்டும் ((MPS) இடங்கள் வெகு குறைவாக இருப்பதால், அதற்குத் தேவையான பரிந்துரைக் கடிதம் பங்கு அலுவலகத்தில் (பங்கு குருவானவர்) இருந்து பெற்றுக்கொண்டு செல்லவும்
- **பொது விடுமுறை நாட்களில்** பங்கு அலுவலகம், மற்றும் நகராண்மைக் கழகம் (MPS) மூடப்பட்டிருக்கும் வேளையில் திரு. T.சேவியர் அவர்களை தொடர்பு கொள்ளவும். (012-680 0016)
- **கல்லறைகளைப் பராமரிப்பது** சிரம்பான் நகராண்மைக் கழகம் மட்டுமே(MPS) ஆலய நிர்வாகம் அல்ல. அனைத்து மரித்த ஆன்மாக்களின் நினைவு தினத்திற்கு முன் கல்லறைகளை சுத்தப்படுத்த உதவியாளர்கள் (கோத்தோங் ரோயோங்) தேவைப்படுகிறார்கள்.

திருமண அருளடையாளக் கொண்டாட்டம்:
அ) கிளமெண்ட் கொனரி & கிறிஸ்டின் சியா 18-08-2018 காலை 11.00
ஆ) அருள்தீபன் & போலினா கீதா 18-08-2018 பகல் 3.30

இன்று திருப்பலியை வழிநடத்திய இளைஞர் குழுவினருக்கு நமது மனமார்ந்த நன்றிகள்

- **170 ஆம் ஆண்டின் நிறைவு - காஃபி டேபிள்- கார்னர் ஸ்டோன் புத்தகம் 170** ஆண்டு வரலாற்றைக் கொண்ட புத்தகம் இப்போது விற்பனையில் உள்ளது. திருப்பலிக்குப் பின் 3 இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் முகப்புகளுக்குச் சென்று புத்தகங்களை வாங்கிக்கொள்ளுங்கள். ஒன்றின் விலை ரிம:40.00 உங்களுக்குத் தெரிந்த குருவானவருக்கு இதைப் பரிசளிக்க விரும்பினால், பட்டியலில் இருக்கும் அவர்களின் பெயர்களைத் தெரிவு செய்யுங்கள். அனைத்து அதிச/சோன் சிற்றாலயங்கள்,. பணிக்குழுக்கள், மற்றும் ஒவ்வொரு குடும்பமும் இதை வாங்கிப் பயனுடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
  பங்கு மக்கள் 5 புத்தகம் அடங்கிய பொட்டலத்தை எடுத்து சென்று வெளியில் விற்பனை செய்யலாம். பணத்தை பிறகும் செலுத்தலாம். இதற்காக அமைக்கப்பட்டிருக்கும் மையத்தை நாடுங்கள்.
- **ஏழைகளுக்கான பணிக்குழு: (ஏழைகளின் ஆலயம், ஏழைகளுக்கானது - திருத்தந்தை பிரான்சிஸ்)**
  ஏழைகள் மற்றும் உதவி தேவைப்படுவோருக்கான இந்தப் பணிக்குழு அண்மையில் நம்முடைய பங்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூடுதல் விவரங்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும். நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. இதற்காக காலியான வீடு யாராவது கொடுத்து உதவ முன்வந்தால் பெரிதும் வரவேற்கிறோம்.தொடர்புக்கு பங்கு அலுவலகம்.மற்றும் ஸ்டீபன் டெனிசாப்பு **(016-6110681)**
- **புனித மேரி கிண்டர்கார்டன் பாலர் பள்ளிக்கான சின்னம் வரையும் போட்டி**. ஜலான் லீ சாம். அனைத்து மறைக்கல்வி மாணவர்களையும் இதில் கலந்து கொள்ள அழைக்கின்றோM. கல்வி, அன்பு, அமைதி ஆகியவற்றின் அடிப்படையில் சின்னம் அமைய வேண்டும். வெற்றியாளர்களுக்கு பரிசுகள் உண்டு. கூடுதல் விவரங்கள் விரைவில்
- **"சோய்ஸ்" வார இறுதி நிகழ்ச்சி:**
  i) தமிழ் (மனவுதல் தேவாலயத்தில்) 24(வெள்ளி) - 26(ஞாயிறு) ஆகஸ்ட் 2018 தொடர்பு: ரேய்மண்ட் 016-689 4257
  ii) ஆங்கிலம் (APC) 5 (வெள்ளி) 7 (ஞாயிறு) அக்டோபர் 2018 தொடர்பு:
  choiceklrecruitment@gmail.com
- **உலக பூர்வீக குடிமக்களின் தினம் 2018 (சபா & சரவாக்/பூர்வூக குடிமகக்ள்)**
  19-08-2018(ஞாயிறு) காலை 10.00 -4.00 வரை - கம்போங் செபீர் கிறிஸ்து ஒளி சிற்றாலயம். திருப்பலி பகல் 1.00 மணி தேசிய மொழியில்
- **விவிலிய ஞாயிறையொட்டி விவிலிய புதிர் குறுக்கெழுத்துப் போட்டி** விடைத்தாள்களை ஆகஸ்டு 12ம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ விவிலிய பணிக்குழு ஆசிரியர்களிடமோ அல்லது ஆலய அலுவலகத்திலோ ஒப்படைக்கலாம். மேலதிக தொடர்புக்கு : ரீத்தா சேவியர் : 012 918 1620 அன்னமேரி : 014 222 4924

- **அருள்திரு. ஜோர்ஜ்** அவர்கள் ஆகஸ்ட் 7-8 தேதிகளில் தீபகற்ப மேய்ப்புப்பணி கருப்பொருள் கூட்டத்தில் APC,KL கலந்துகொள்ளவிருக்கிறார்.
- **அன்னை மரியாளின் விண்ணேற்றப் பெருவிழா**-(கடன் திருநாள்) திருப்பலிகள் 15-08-2018 காலை 6.45 (ஆங்கிலம்) இரவு 8.00 (நான்குமொழி) தித்தி மாலை 4.30
- **தித்தி புனித அகுஸ்தினார் திருவிழா** - 26-08-2018(ஞாயிறு) மாலை 4.30
- குருக்களின் மாதாந்திர தியானம்: 13 -14(திங்கள்&செவ்வாய்) APC,KL
- **சமயங்களுக்கிடையிலான உரையாடல் பணிக்குழு** ( PMEIA) இவற்றைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள ஒரு நாள் நிகழ்ச்சி நெகிரி மாநில அளவில் நடைபெறுகிறது அனைத்து பங்கு மக்களையும் வரவேற்கிறோம். 22-08-2018(பொதுவிடுமுறை) நேரம் காலை 9.00 - 2.00 வரை தொடர்புக்கு: கிறிஸ்டோபர் ( 019-6216 194) கட்டணம் ரிம:10.00 நபருக்கு
- **குழந்தைகளுக்கான திருமுழுக்கு** 18-08-2018 மாலை 7.00 மணி
- **மறைக்கல்வி மாணவர்களுக்கு( குழந்தையல் திருமுழுக்குப் பெற தவறியவர்களுக்கு) விசேச திருமுழுக்கு 25-08-2018 காலை 10.00 மணி**
- **குருவானவர்கள் இல்லச் சந்திப்பு நடத்துகிறார்கள்.** ஆகஸ்ட் மாதத்தில் சோன் 13(செனவாங்) சோன் 14 (தாமான் துங்கு ஜாபார்) பொறுப்பாளர்களுக்கு முன்னரே அறிவிக்கப்படும்.